**பாடம் 7.4 திருநெல்வேலிச் சீமையும் கவிகளும்**

| நூல் வெளி |
|---|
| • டி.கே.சி என அழைக்கப்படும் டி.கே. சிதம்பரநாதர் வழக்கறிஞர் தொழில் செய்தவர்;<br>• தமிழ் எழுத்தாளராகவும் திறனாய்வாளராகவும் புகழ் பெற்றவர்;<br>• இரசிகமணி என்று சிறப்பிக்கப்பட்டவர்.<br>• இவர் தமது வீட்டில் ‘வட்டத்தொட்டி’ என்னும் பெயரில் இலக்கியக் கூட்டங்கள் நடத்தி வந்தார்.<br>• இவர் கடித இலக்கியத்தின் முன்னோடி, தமிழிசைக் காவலர், வளர்தமிழ் ஆர்வலர், குற்றால முனிவர் எனப் பலவாறாகப் புகழப்படுகிறார்.<br>• பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள கட்டுரை இவரது இதய ஒலி என்னும் நூலில் இருந்து தரப்பட்டுள்ளது. |



TNPSC Coaching Centre போகாமல் வீட்டில் முயற்சி செய்யும் My Brother, Sister மட்டும்
இந்த ஆண்டு 2022 -2023 நான் JOB போகணும், www.minnalvegakanitham.in

### பாடம் 8.1 புதுமை விளக்கு

| நூல் வெளி |
|---|
| • பொய்கையாழ்வார் காஞ்சிபுரத்திற்கு அருகிலுள்ள திருவெஃகா என்னும் ஊரில் பிறந்தவர்.<br>• நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் உள்ள முதல் திருவந்தாதி இவர் பாடியதாகும்.<br>• அதன் முதல் பாடல் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. |

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா – நன்புஉருகி
ஞானச்சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ் புரிந்த நான்

– பூதத்தாழ்வார்

### பாடம் 8.2 அறம் என்னும் கதிர்

| நூல் வெளி |
|---|
| • முனைப்பாடியார் திருமுனைப்பாடி என்னும் ஊரைச் சேர்ந்த சமணப்புலவர்.<br>• இவரது காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டு.<br>• இவர் இயற்றிய அறநெறிச்சாரம் 225 பாடல்களைக் கொண்டது.<br>• அறநெறிகளைத் தொகுத்துக் கூறுவதால் இந்நூல் அறநெறிச்சாரம் எனப் பெயர் பெற்றது.<br>• இந்நூலின் பதினைந்தாம் பாடல் நமக்குப் பாடமாகத் தரப்பட்டுள்ளது. |

www.minnalvegakanitham.in

### பாடம் 8.4 உண்மை ஒளி

| நூல் வெளி |
|---|
| • ஜென் என்னும் ஜப்பானிய மொழிச் சொல்லுக்கு தியானம் செய் என்பது பொருள். புத்த மதத்தைச் சார்ந்த துறவியரில் ஒரு பிரிவினரே ஜென் சிந்தனையாளர்கள். இவர்கள் பெரும்பாலும் சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் தமது சிந்தனைகளைச் சிறு நிகழ்ச்சிகள், எளிய கதைகள் ஆகியவற்றின் மூலம் விளக்கினர்.<br>• ஜென் கதைகளுள் ஒன்று இங்குப் படக்கதையாகத் தரப்பட்டுள்ளது. |



TNPSC Coaching Centre போகாமல் வீட்டில் முயற்சி செய்யும் My Brother, Sister மட்டும்
இந்த ஆண்டு 2022 -2023 நான் JOB போகணும், www.minnalvegakanitham.in

### பாடம் 9.1 மலைப்பொழிவு

**நூல் வெளி**

- கண்ணதாசனின் இயற்பெயர் முத்தையா.
- இவர் கவியரசு என்னும் சிறப்புப் பெயராலும் அழைக்கப்படுகிறார்.
- காவியங்கள், கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், நாடகங்கள், புதினங்கள் போன்ற இலக்கிய வடிவங்களில் பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்.
- ஏராளமான திரைப்படப் பாடல்களையும் எழுதியுள்ளார்.
- இவர் தமிழக அரசவைக் கவிஞராகவும் இருந்துள்ளார்.
- இயேசுவின் வாழ்க்கை வரலாற்றையும் அவரது அறிவுரைகளையும் கூறும் நூல் இயேசுகாவியம் ஆகும்.
- இந்நூலில் உள்ள மலைப்பொழிவு என்னும் பகுதியிலிருந்து சில பாடல்கள் இங்குத் தரப்பட்டுள்ளன.

### பாடம் 9.2 தன்னை அறிதல்

**நூல் வெளி**

- சே. பிருந்தா புகழ்பெற்ற பெண்கவிஞர்களுள் ஒருவர்.
- மழை பற்றிய பகிர்தல்கள், வீடு முழுக்க வானம், மகளுக்குச் சொன்ன கதை ஆகிய கவிதை நூல்களை எழுதியுள்ளார்.
- இக்கவிதை மகளுக்குச் சொன்ன கதை என்னும் நூலிலிருந்து எடுத்துத் தரப்பட்டுள்ளது.

www.minnalvegakanitham.in

### பாடம் 9.4 பயணம்

**நூல் வெளி**

- பாவண்ணன் சிறுகதை, கவிதை, கட்டுரை எனப் பல்வேறு வகையான இலக்கிய வடிவங்களிலும் எழுதி வருகிறார்.
- கன்னட மொழியிலிருந்து பல நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.
- வேர்கள் தொலைவில் இருக்கின்றன, நேற்று வாழ்ந்தவர்கள், கடலோர வீடு, பாய்மரக்கப்பல், மீசைக்கார பூனை, பிரயாணம் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.
- பிரயாணம் என்னும் நூலில் உள்ள பயணம் என்னும் சிறுகதை இங்குத் தரப்பட்டுள்ளது.



TNPSC Coaching Centre போகாமல் வீட்டில் முயற்சி செய்யும் My Brother, Sister மட்டும்
இந்த ஆண்டு 2022 -2023 நான் JOB போகணும், www.minnalvegakanitham.in

பாடல் வரிகள் – ஆசிரியர் – நூல்கள் (153 வினா விடைகள் )

1. அருள்நெறி அறிவைத் தரலாகும்
அதுவே தமிழன் குரலாகும்
பொருள்பெற யாரையும் புகழாது
போற்றா தாரையும் இகழாது **– எங்கள் தமிழ் – நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்**
2. கொல்லா விரதம் குறியாகக்
கொள்ளை பொய்யா நெறியாக
எல்லா மனிதரும் இன்புறவே
என்றும் இசைந்திடும் அன்பறமே **– நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார்**
3. அன்பும் அறமும் ஊக்கிவிடும்
அச்சம் பொழிகிற வானொலியாம்
இன்பம் பொழிகிற வானொலியாம்
எங்கள் தமிழெனும் தேன்மொழியாம் **– நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார்**
4. காந்தியக்கவிஞர் என்று அழைக்கப்படுபவர் **– நாமக்கல் கவிஞர் வெ இராமலிங்கனார்**
5. தமிழகத்தின் முதல் அரசவை கவிஞர் **– நாமக்கல் கவிஞர் வெ இராமலிங்கனார்**
6. கத்தி யின்றி ரத்த மின்றி
யுத்த மொன்று வருகுது
சத்தியத்தின் நித்தி யத்தை
நம்பும் யாரும் சேருவீர் **– நாமக்கல் கவிஞர் வெ இராமலிங்கனார்**
7. ஒன்றல்ல இரண்டல்ல தம்பி சொல்ல
ஒப்புமை இல்லாத அற்புதம் தமிழ்நாட்டில்
தென்றல் தரும் இனிய தேன்மணமும் கமழும்
செங்கனியும் பொன்கதிரும் தந்துதவும் நன்செய்வளம்
**– ஒன்றல்ல இரண்டல்ல – உடுமலை நாராயணகவி**
8. பகைவென்ற திறம்பாடும் பரணிவகை – செழும்
பரிபாடல் கலம்பகங்கள் எட்டுத்தொகை – வான்
புகழ்கொண்ட குறளோடு அகம்புறம் – செம்
பொருள்கண்ட தமிழ்ச்சங்க இலக்கியப் பெருஞ்செல்வம் **– உடுமலை நாராயணகவி**
9. முல்லைக்குத் தேர்கொடுத்தான் வேள்பாரி – வான்

www.minnalvegakanitham.in



TNPSC Coaching Centre போகாமல் வீட்டில் முயற்சி செய்யும் My Brother, Sister மட்டும்
இந்த ஆண்டு 2022 -2023 நான் JOB போகணும், www.minnalvegakanitham.in

முகிலினும் புகழ்படைத்த உபகாரி – கவிச்
சொல்லுக்குத் தலைகொடுத்தான் அருள்மீறி – இந்த
வள்ளலாம் குமணன்போல் வாழ்ந்தவர் வரலாறு **– உடுமலை நாராயணகவி**

10. இசைப்பாடல் என்று அழைக்கப்படும் நூல் – **பரிபாடல்**
11. முல்லைக்கு தேர்தந்து மழைமேகத்தை விடப்புகழ் பெற்றவன் – **வள்ளல் வேள்பாரி**
12. புலவரின் சொல்லுக்காக தன் தலையையே தரத் துணிந்தவன் – **குமண வள்ளல்**
13. பகுத்தறிவு கவிராயர் என்று புகழப்படுபவர் – **உடுமலை நாராயணகவி**
14. தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியராகவும் நாடக எழுத்தாளராகவும் புகழ் பெற்றவர் – **உடுமலை நாராயணகவி**
15. தமது பாடல்கள் மூலம் பகுத்தறிவுக் கருத்துகளை பரப்பியவர் – **உடுமலை நாராயணகவி**
16. நாட்டுப்புற இசையின் எளிமையைக் கையாண்டு கவிதைகள் எழுதியவர் **– உடுமலை நாராயணகவி**
17. "எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பில்
    திரிபும் தத்தமில் சிறிது உள வாகும்" **– நன்னூல் நூற்பா**
18. பேசப்படுவதும் கேட்கப்படுவதுமே உண்மையான மொழி; எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் அடுத்தநிலையில் வைத்துக் கருதப்படும் மொழியாகும். இவையே அன்றி வேறுவகை மொழிநிலைகளும் உண்டு. எண்ணப்படுவது, நினைக்கப்படுவது, கனவு காணப்படுவது ஆகியவையும் மொழியே ஆகும் என்ற கூற்றை கூறியவர் **– மு. வரதராசனார்**
19. எளியநடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்
    இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
    வெளியுலகில், சிந்தனையில் புதிதுபுதிதாக
    விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்கள் எல்லாம் கண்டு
    தெளிவுறுத்தும் படங்களொடு சுவடிஎலாம் செய்து
    செந்தமிழைச் செழுந்தமிழாய் செய்வதுவும் வேண்டும் – **பாவேந்தர் பாரதிதாசன்**
20. கார்த்திகை தீபமெனக்
    காடெல்லாம் பூத்திருக்கும்
    பார்த்திட வேண்டும்மடீ – கிளியே
    பார்வை குளிருமடீ! **– காடு – சுரதா**

www.minnalvegakanitham.in

21. காடு பொருள்கொடுக்கும்
காய்கனி ஈன்றெடுக்கும்
கூடிக் களித்திடவே – கிளிவே
குளிர்ந்த நிழல்கொடுக்கும் **– காடு – சுரதா**

22. குரங்கு குடியிருக்கும்
கொம்பில் கனிபறிக்கும்
மரங்கள் வெயில்மறைக்கும் – கிளியே
வழியில் தடையிருக்கும் **– காடு – சுரதா**

23. பச்சை மயில்நடிக்கும்
பன்றி கிழங்கெடுக்கும்
நச்சர வங்கலங்கும் – கிளியே
நரியெலாம் ஊளையிடும் **– காடு – சுரதா**

24. அதிமது ரத்தழையை
யானைகள் தின்றபடி
புதுநடை போடுமடீ – கிளியே
பூங்குயில் கூவுமடி **– காடு – சுரதா**

25. சிங்கம் புலிகரடி
சிறுத்தை விலங்கினங்கள்
எங்கும் திரியுமடீ – கிளியே
பூங்குயில் கூவுமடி! **– காடு – சுரதா**

www.minnalvegakanitham.in

26. சிங்கம் புலிகரடி
சிறுத்தை விலங்கினங்கள்
எங்கும் திரியுமடீ – கிளியே
இயற்கை விடுதியிலே! **– காடு – சுரதா**

27. நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடீ! – கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடி
கூட்டத்தில் கூடிநின்று



TNPSC Coaching Centre போகாமல் வீட்டில் முயற்சி செய்யும் My Brother, Sister மட்டும்
இந்த ஆண்டு 2022 -2023 நான் JOB போகணும், www.minnalvegakanitham.in

கூவிப் பிதற்றலன்றி

நாட்டத்தில் கொள்ளாரடீ! – கிளியே

நாளில் மறப்பாரடீ – **பாரதியார்**

28. கொப்புகள் விலக்கி

கொத்துக் கொத்தாய்

கருவேலங்காய்

பறித்துப் போடும் மேய்ப்பனை

ஒருநாளும் சிராய்ப்பதில்லை கருவமுட்கள் – **கலாப்பிரியா**

29. குழந்தை வரைந்தது

பறவைகளை மட்டுமே வானம் உருவானது – **கலாப்பிரியா**

30. பளபளக்கும் பச்சை இலைகளூடே

கருநீலக் கோலிக்குண்டுகளாய்

நாவற்பழங்கள் கிளைகளில் தொங்கும்

பார்க்கும்போதே நாவில் நீரூறும்

**– அப்படியே நிற்கட்டும் அந்த மரம் – ராஜமார்த்தாண்டம்**

31. காக்கை குருவி மைனா கிளிகள்

இன்னும் பெயரறியாப் பறவைகளுடன்

அணில்களும் காற்றும் உதிர்த்திடும்

சுட்ட பழங்கள் பொறுக்க

சிறுவர் கூட்டம் அலைமோதும்

**– அப்படியே நிற்கட்டும் அந்த மரம் – ராஜமார்த்தாண்டம்**

32. அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறள் என்று திருக்குறளின் பெருமையை போற்றியவர் – **ஔவையார்**

33. முதற்பாவலர்,பொய்யில் புலவர், செந்நாப்போதர் – **திருவள்ளுவர்**

34. தமிழ்நூல்களில் திரு என்னும் அடைமொழியோடு வருகின்ற முதல் நூல் – **திருக்குறள்**

35. முப்பால், தெய்வநூல், பொய்யாமொழி – **திருக்குறள்**

36. அறவழி என்றவுடன் நம் நினைக்கு வருபவர் – **தேசத்தந்தை காந்தியடிகள்**

37. சோழ மன்னன் போரவைக் கோப்பெரு நற்கிள்ளியின் செவிலித்தாயாக விளங்கியவர் – **காவற்பெண்டு**



TNPSC Coaching Centre போகாமல் வீட்டில் முயற்சி செய்யும் My Brother, Sister மட்டும்
இந்த ஆண்டு 2022 -2023 நான் JOB போகணும், www.minnalvegakanitham.in

38. கல்வியில் தேர்ச்சியும் கவிபாடும் ஆற்றலும் மிக்கவர் – **காவற்பெண்டு**

39. சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்

யாண்டு உளனோ எனவினவுதி என்மகன்

யாண்டுஉளன் ஆயினும் அறியேன் ஒரும்

புலிசேர்ந்து போகிய கல்அளை போல

ஈன்ற வயிறோ இதுவே

தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே

**– புலி தங்கிய குகை – காவற்பெண்டு**

40. காவற்பெண்டு பாடிய ஒரே ஒரு பாடல் எந்த நூலில் உள்ளது – **புறநானூறு**

41. சுத்தவீர சூரன் கட்ட பொம்முதுரை

துலங்கும் பாஞ்சை வளங்கள் சொல்வேன் – பாஞ்சை வளம் – **நா. வானமாமலை**

42. நாட்டு வளங்களை சொல்லுகிறேன் – பாஞ்சைக்

கோட்டை வளங்களைக் கேளுமையா

கோட்டைகளாம் சுத்துக் கோட்டைகளாம் – மதில்

கோட்டைகள்தான் கெட்டி வேலைகளாம் – **நா. வானமாமலை**

43. வீட்டிலுயர் மணிமேடைகளாம் – மெத்தை

வீடுகளா மதிலோடை களாம்

பூட்டுங்கதவுகள் நேர்த்திகளாம் – பணப்

பொக்கிஷ வீடும்பார் சாஸ்திகளாம் – **நா. வானமாமலை**

44. ஆசார வாசல் அலங்காரம் – துரை

ராசன் கட்டபொம்மு சிங்காரம்

ராசாதி ராசன் அரண்மனையில் – பாஞ்சை

நாட்டரசன் கொலுவீற்றிருந்தான் – **நா. வானமாமலை**

45. விந்தையாக் தெருவீதிகளும் – வெகு

விஸ்தாரமாய்க் கடை வாசல்களும்

நந்தவனங்களும் சந்தனச் சோலையும் – அங்கே

நதியும் செந்நெல் கமுகுகளும் – **நா. வானமாமலை**

46. வாரணச் சாலை ஒருபுறமாம் – பரி

வளரும் சாலை ஒருபுறமாம்

www.minnalvegakanitham.in

தோரண மேடை ஒருபுறமாம் – தெருச்

சொக்கட்டான் சாரியல்ஓர் புறமாம் – **நா. வானமாமலை**

47. சோலையில் மாங்குயில் கூப்பிடுமாம் – வளம்

சொல்லி மயில் விளையாடிடுமாம்

அன்பு வளர்ந்தேறும் பாஞ்சாலநாட்டில் – சில

அதிசயம் சொல்கிறேன் கேளுமையா – **நா. வானமாமலை**

48. முயலும் நாயை விரட்டிடுமாம் – நல்ல

முனையுள்ள பாஞ்சால நாட்டினிலே

பசுவும் புலியும் ஒரு துறையில் – வந்து

பால்குடிக்குந் தண்ணீர் தான் குடிக்கும் – **நா. வானமாமலை**

49. கறந்த பாலையுங் காகங் குடியாது – எங்கள்

கட்டபொம்மு துரை பேரு சொன்னால்

வரந்தருவாளே சக்கதேவி – திரு

வாக்கருள் செய்வாளே சக்க தேவி – **நா. வானமாமலை**

50. சுத்த தியாகி என்று தந்தை பெரியாரால் பாராட்டப்பெற்றவர் – **முத்துராமலிங்கதேவர்**

51. முத்துராமலிங்க தேவரை தேசியம் காத்த செம்மல் என்று பாராட்டியவர் – **திரு.வி.க**

52. தென்னாட்டு சிங்கம் – **முத்துராமலிங்க தேவர்**

53. ஜமீன் விவசாயிகள் சங்கம் ஏற்படுத்தி விவசாயிகள் துயர்துடைக்க பாடுபட்டவர் – **முத்துராமலிங்கதேவர்**

54. உழுபவர்களுக்கே நிலம் என்றவர் – **முத்துராமலிங்கதேவர்**

www.minnalvegakanitham.in

55. முத்துராமலிங்கத்தேவரின் சிறப்புப் பெயர்கள் – **தேசியம் காத்த செம்மல், வித்யா பாஸ்கர், பிரவசன கேசரி, சன்மார்க்க சண்டமாருதம், இந்து புத்தசமய மேதை**

56. விவேகானந்தரின் தூதராக, நேதாஜியின் தளபதியாக, சத்தியசீலராக, முருகபக்தராக, ஆன்மிகப் புத்திரராக, தமிழ்பாடும் சித்தராக, தென்பாண்டிச் சீமையின் முடிசூடா மன்னராக, நீதிவழுவா நேர்மையாளராக, புலமையில் கபிலராக, வலிமையில் கரிகாலனாக, கொடையில் கர்ணனாக, பக்தியில் பரமஹம்சராக, இந்தியத் தாயின் நன்மகனாக விளங்கியவர் – **முத்துராமலிங்கதேவர்**

57. சுதந்திரம் எனது பிறப்புரிமை அதை அடைந்தே தீருவேன் – **பாலகங்காதர திலகர்**



TNPSC Coaching Centre போகாமல் வீட்டில் முயற்சி செய்யும் My Brother, Sister மட்டும்
இந்த ஆண்டு 2022 -2023 நான் JOB போகணும், www.minnalvegakanitham.in

58. வந்தே மாதரம் என்போம், எங்கள் மாநிலத்தாயை வணங்குதும் எண்போம் என்று பாடியவர் – **பாரதியார்**

59. சிறைச்சாலையில் செக்கிழுத்த துயரத்தை மாற்றியது என் செந்தமிழன்றோ? கைத்தோல் உரியக் கடும்பணி புரிந்தபோது என் கண்ணீரை மாற்றியது கன்னித் தமிழன்றோ? என்று கூறியவர் – **வ.உ.சி**

60. தொல்காப்பியத்தை படித்து படித்து என் தொல்லையெல்லாம் மறந்தேன் – **வ.உ.சி**

61. இன்னிலையை கற்று என் இன்னல்களையெல்லாம் வென்றேன் – **வ.உ.சி**

62. பாயக் காண்பது சுதந்திரவெள்ளம்
பணியக் காண்பது வெள்ளையர் உள்ளம் என்று நாம் பாடும் நாள் எந்நாளோ ?
என்று கூறியவர் – **வ.உ.சி**

63. சொல்லின் செல்வர் – **இரா.பி. சேது**

64. அறம் செய விரும்பு – **ஔவையார்**

65. வானம் ஊன்றி மதலை போல
ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்து
இரவில் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி
உரவுநீர் அழுவந்து ஓடுகலம் கரையும்
துறை – **கடியலூர் உருத்திரங் கண்ணனார்**

66. உலகுகிளர்ந் தன்ன உருகெழு வங்கம்
புலவுத்திரைப் பெருங்கடல் நீர்இடைப் போழ
இரவும் எல்லையும் அசைவுஇன்று ஆகி
விரைசெலல் இயற்கை வங்கூழ் ஆட்ட
கோடுஉயர் திணிமணல் அகன்துறை நீகான்
மாட ஒள்எரி மருங்குஅறிந்து ஒய்ய – **மருதன் இளநாகனார்**

67. நெடுந்தொகை என்று அழைக்கப்படும் நூல் – **அகநானூறு**

68. கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து – **திருக்குறள் 496**

69. பூம்புகார் துறைமுகத்திலிருந்து கப்பல்கள் மூலம் பொருள்கள் ஏற்றுமதியும் இறக்குமதியும் செய்யப்பட்டன என்பதை விரிவாக விளக்கும் நூல் – **பட்டினப்பாலை**



TNPSC Coaching Centre போகாமல் வீட்டில் முயற்சி செய்யும் My Brother, Sister மட்டும்
இந்த ஆண்டு 2022 -2023 நான் JOB போகணும், www.minnalvegakanitham.in

70. உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கம் என்னும் பாடல் வரி இடம் பெற்றுள்ள நூல் – **அகநானூறு**

71. அருங்கலம் தரீஇயர் நீர்மிசை நிவக்கும்
பெருங்கலி வங்கம் என்னும் பாடல் வரி இடம் பெற்றுள்ள நூல் – **பதிற்றுப்பத்து (பாடல் 52)**

72. —————- என்னும் நிகண்டு நூலில் பலவகையான கப்பல்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன – **சேந்தன் திவாகரம்**

73. கலஞ்செய் கம்மியர் வருகெனக் கூஇய் என்னும் பாடல் எந்த நூலில் இடம் பெற்றுள்ளது – **மணிமேகலை**

74. பாய்மரக் கப்பலின் பாய், கயிறு ஆகியவற்றில் பழுது ஏற்படும் பொழுது அவற்றை மரப்பிசின் கொண்டு இணைத்தனர் என்று குறிப்பிடும் நூல் – **பரிபாடல்**

75. நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளி தொழில் ஆண்ட உரவோன் மருக
என்னும் பாடல் இடம் பெற்றுள்ள நூல் – **புறநானூறு – வெண்ணிக்குயத்தியார்**

76. கலம் தந்த பொற்பரிசம்
கழித்தோணியால் கரை சேர்க்குந்து
என்று குறிப்பிடும் நூல் – **புறநானூறு (பாடல் 343)**

77. அறிவியல் புனைகதைகளின் தலைமகன் – **ஜீல்ஸ் வெர்ன் (பிரான்ஸ் நாட்டை சேர்ந்தவர்)**

78. ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட
என்னை எழுதென்று சொன்னது வான்
ஓடையும் தாமரைப் பூக்களும் தங்களின்
ஓவியந் தீட்டுக என்றுரைக்கும்
காடும் கழனியும் கார்முகிலும் வந்து
கண்ணைக் கவர்ந்திட எத்தனிக்கும்
ஆடும் மயில் நிகர் பெண்களெல்லாம் உயிர்
அன்பினைச் சித்திரம் செய்க என்றார் – **இன்பத்தமிழ்க் கல்வி – பாரதிதாசன்**

79. சோலைக் குளிர்தரு தென்றல் வரும்பசுந்
தோகை மயில்வரும் அன்னம் வரும்
மாலைப் பொழுதினில் மேற்றிசையில் விழும
மாணிக்கப் பரிதி காட்சி தரும்



TNPSC Coaching Centre போகாமல் வீட்டில் முயற்சி செய்யும் My Brother, Sister மட்டும்
இந்த ஆண்டு 2022 -2023 நான் JOB போகணும், www.minnalvegakanitham.in

வேலைச் சுமந்திடும் வீரரின் தோள் உயர்
வெற்பென்று சொல்லி வரைக என்னும்
கோலங்கள் யாவும் மலை மலையாய் வந்து
கூவின என்னை – இவற்றிடையே – **இன்பத்தமிழ்க் கல்வி – பாரதிதாசன்**

80. இன்னலிலே தமிழ் நாட்டினிலேயுள்ள
என்தமிழ் மக்கள் துயின்றிருந்தார்
அன்னதோர் காட்சி இரக்கமுண்டாக்கியென்
ஆவியில் வந்து கலந்ததுவே
இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர்
என்றுரைக்கும் நிலை எய்தி விட்டால்
துன்பங்கள் நீங்கும் சுகம் வரும் நெஞ்சினில்
தூய்மை உண்டாகிடும் வீரம் வரும்! – **இன்பத்தமிழ்க் கல்வி – பாரதிதாசன்**

81. வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின்வல்வார்
எச்சம் எனவொருவன் மக்கட் செய்வன
விச்சைமற்று அல்ல பிற – **அழியாச் செல்வம் – சமண முனிவர்**

82. நாலடி நானூறு என்றும், வேளான் வேதம் என்றும் அழைக்கப்படும் நூல் – **நாலடியார்**

83. திருக்குறள் போன்றே அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்பு கொண்ட நூல் – **நாலடியார்**

84. நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்னும் தொடர் மூலம் அறியப்படும் நூல் – **நாலடியார்**

www.minnalvegakanitham.in

85. வெள்ளத்தால் அழியாது வெந்தணலால்
வேகாது வேந்த ராலும்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும்
நிறைவன்றிக் குறைவுறாது
கள்ளர்க்கோ பயமில்லை காவலுக்கு
மிகஎளிது கல்வி யென்னும்
உள்ளபொருள் உள்ளிருக்கப் புறத்தேயோர்
பொருள்தேடி உழல்கின் றீரே – **தனிப்பாடல் திரட்டு**



TNPSC Coaching Centre போகாமல் வீட்டில் முயற்சி செய்யும் My Brother, Sister மட்டும்
இந்த ஆண்டு 2022 -2023 நான் JOB போகணும், www.minnalvegakanitham.in

86. நமது எதிர்காலத்தை உருவாக்கும் பள்ளிக்கு கோயில் என்று பெயர் வைத்தவர் – **பாரதியார்**

87. பள்ளி தலமனைத்தும் கோயில் செய்குவோம்; எங்கள் பாரத தேசமென்று தோள்கொட்டுவோம் என்று பாடியவர் – **பாரதியார்**

88. இளமையில் கல் என்றவர் – **ஔவையார்**

89. கலையுலகப் பிரும்மாக்களே
மண்ணின் வனப்புக்குப்
புதிய அழகுகள் சேர்ப்பவர்களே
ஒரு மானுடத்தின் வேண்டுகோள் – **ஒரு வேண்டுகோள் – தேனரசன்**

90. நீங்கள் சிற்பிகளாகப்
பாறை உடைப்பவனின்
சிலை வடித்தால்
வியர்வை நெடி வீசட்டும் அதில் – **ஒரு வேண்டுகோள் – தேனரசன்**

91. வயல்வெளி உழவனின்
உருவ வார்ப்பெனில்
ஈரமண் வாசம் இருக்க வேண்டும் அதில் – **ஒரு வேண்டுகோள் – தேனரசன்**

92. ஓவியர்களாகத்
தாய்மையின் பூரிப்பைச் சித்திரமாக்கினால்
அவள் முகப்பொலிவில்
வழித்தெடுக்குமாறு இருக்கட்டும்
கரிசன பாச உணர்வுகள் – **ஒரு வேண்டுகோள் – தேனரசன்**

93. ஒரு சின்ன மழலைச் சித்திரமா
பால் மணம் கமழ வேண்டும் அதன் பளிங்கு மேனியில் – **தேனரசன்**

94. ஆல்ப்ஸ் மலைச் சிகரங்களா
அட்லாண்டிக் சமுத்திர அலைகளா
அமேசான் காடுகளா
பனிபடர் பள்ளத்தாக்குகளா – **ஒரு வேண்டுகோள் – தேனரசன்**

95. ஏதாயினும் இதை நினைவில் கொள்ளுங்கள்
மானுட அடையாளம் ஒன்று

www.minnalvegakanitham.in

இருக்கவேண்டும் அதில் கட்டாயம்

மனிதன் இல்லாத – இணையாத

எந்த வனப்பும் வனப்பில்லை

அவன் கலவாத எதிலும்ஜீவ உயிர்ப்பில்லை – **தேனரசன்**

96. கட்டி அடிக்கையால் கால்மாறிப் பாய்கையால்

வெட்டி மறிக்கின்ற மேன்மையால் – **முட்டப்போய்**

97. மாறத் திரும்புகையால் வண்கீரைப் பாத்தியுடன் ஏறப் பரியாகுமே – கீரைப்பாத்தியும் குதிரையும் – **காளமேகப்புலவர்**

98. கருத்துப் படங்களை அறிமுகப்படுத்தியவர் – **பாரதியார்**

99. கலம்காரி ஓவியம் என்று அழைக்கப்படுவது – **துணி ஓவியம்**

100. ஓவிய மண்டபத்தில் பல வகை ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. ஓவியங்கள் குறித்து அறிந்தோர் அறியாதவர்களுக்கு விளக்கிக் கூறினர் என்ற செய்தி எந்த நூலில் இடம் பெற்றுள்ளது – **பரிபாடல்**

101. இன்ன பலபல எழுத்துநிலை மண்டபம்

துன்னுநர் சுட்டவும் சுட்டு அறிவுறுத்தவும் – **பரிபாடல்**

102. புனையா ஓவியம் கடுப்பப் புனைவில் – **நெடுநல்வாடை**

103. புனையா ஓவியம் புறம் போந்தன்ன – **மணிமேகலை**

104. உலக தமிழ்ச் சங்கத்தின் கட்டடத்தின் நுழைவு வாயிலில் தருமிக்கு பாண்டிய மன்னன் பொற்கிழி வழங்கிய **திருவிளையாடல் புராணக் காட்சி** புடைப்பு சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளது.

www.minnalvegakanitham.in

105. பூம்புகார் பற்றிய செய்திகள் எந்தெந்த நூலில் இடம்பெற்றுள்ளது – **சிலப்பதிகாரம், பட்டினப்பாலை**

106. பூம்புகாரில் மருவூர்ப்பாக்கம் என்னும் கடல் பகுதியும் பட்டினப்பாக்கம் என்னும் நகரப் பகுதியும் அமைந்திருந்ததாக குறிப்பிடும் நூல் – **சிலப்பதிகாரம்**

107. மாரியொன்று இன்றி வறந்திருந்த காலத்தும்

பாரி மடமகள் பாண்மகற்கு – **நீர் உலையுள்**

பொன்திறந்து கொண்டு புகாவா நல்கினாள்

ஒன்றாகு முன்றிலோ இல் – **பழமொழி நானூறு – முன்றுறை அரையனார்**

108. ஓடை எல்லாம் தாண்டிப்போயி – ஏலேலங்கிடி ஏலேலோ



TNPSC Coaching Centre போகாமல் வீட்டில் முயற்சி செய்யும் My Brother, Sister மட்டும்
இந்த ஆண்டு 2022 -2023 நான் JOB போகணும், www.minnalvegakanitham.in

ஒண்ணரைக்குழி நிலமும் பார்த்து – ஏலேலங்கிடி ஏலேலோ

லையெல்லாம் வரிஞ்சுக்கட்டி – ஏலேலங்கிடி ஏலேலோ

சேத்துக்குள்ளே இறங்குறாங்க – ஏலேலங்கிடி ஏலேலோ

**– மலை அருவி – கி.வா. ஜகந்நாதன்**

109.திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி என்று கூறியவர் – **திருஞானசம்பந்தர்**

110.திருநெல்வேலியை தண்பொருநைப் புனல் நாடு என்று குறிப்பிட்டவர் – **சேக்கிழார்**

111.முற்காலத்தில் திருநெல்வேலிக்கு ———— என்னும் பெயரும் உண்டு – **வேணுவனம்**

112.பொதியி லாயினும் மாலையினும்

பதியெழு அறியாப் பழங்குடி

என்னும் பாடலில் இளங்கோடிகள் எந்த மலைக்கு முதலிடம் கொடுத்து பாடுகிறார் –

**பொதிகை மலை**

113.வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சம்

மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்

**– குற்றாலக் குறவஞ்சி – திரிகூட இராசப்பக் கவிராயர்**

114.திருநெல்வேலிப் பகுதியை வளம் செழிக்க செய்யும் ஆறு – **தாமிரபரணி**

115.முத்துப்படி பரப்பிற் கொற்கை முன்றுறை – **நற்றிணை** (23:6)

116.கொற்கையில் பெருந்துறை முத்து – **அகநானூறு** (27:9)

117.திங்கள் நாள்விழா மல்கு திருநெல்

வேலியுறை செல்வர் தாமே – **திருஞானசம்பந்தர்**

118.தாமிரபரணி ஆற்றின் மேற்கு கரையில் அமைந்துள்ள நகரம் – **திருநெல்வேலி**

119.தாமிரபரணி ஆற்றின் கிழக்கு கரையில் அமைந்தள்ள நகரம் – **பாளையங்கோட்டை**

120.இரட்டை நகரங்கள் என அழைக்கப்படும் நகரங்கள் – **திரநெல்வேலி, பாளையங்கோட்டை**

121.தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்டு என்று அழைக்கப்படும் நகரம் – **பாளையங்கோட்டை**

122.பூமாது இருந்தென் புவிமாது இருந்தென் இப்பூதலத்தில்

நாமாது இருந்தென்ன நாமும் இருந்தென்ன நாவலர்க்குக்

கோமான் அழகமர் மால்சீதக் காதி கொடைக்கரத்துச்

சீமான் இறந்திட்ட போதே புலமையும் செத்ததுவே! – **நமசிவாயப் புலவர்**

123.வாடா என அழைத்து வாழ்வித்தால் அம்ம உனைக்

கூடாதென் றார் தடுப்பார் கோமதித்தாய் ஈஸ்வரியே! – **அழகிய சொக்கநாதர்**



TNPSC Coaching Centre போகாமல் வீட்டில் முயற்சி செய்யும் My Brother, Sister மட்டும்
இந்த ஆண்டு 2022 -2023 நான் JOB போகணும், www.minnalvegakanitham.in

124.நுண் துளி தூங்கும் குற்றாலம் என்று பாடியவர் – **திருஞான சம்பந்தர்**

125.உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனி அமையும்
குற்றாலத் துறைகின்ற கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே! – **மாணிக்கவாசகர்**

126.டி.கே.சி என அழைக்கப்படுபவர் – **டி.கே. சிதம்பரநாதர்**

127.இரசிகமணி என்று சிறப்பிக்கப்பட்டவர் – **டி.கே. சிதம்பரநாதர்**

128.கடித இலக்கயத்தின் முன்னோடி, தமிழிசைக் காவலர், வளர்தமிழ் ஆர்வலர், குற்றால முனிவர் எனப் பலவாறாகப் புகழப்படுபவர் – **டி.கே.சிதம்பரநாதர்**

129.வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் செய்ய
சுடர்ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடர்ஆழி நீங்குகவே என்று – **பொய்கை ஆழ்வார்**

130.அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா – நன்புஉருகி
ஞானச்சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ் புரிந்த நான் – **பூதத்தாழ்வார்**

131.இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக
வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனஓர்
பைங்கூழ் சிறுகாலைச் செய் – **முனைப்பாடியார்**

132.வாழ்வு அறநிலையப் பாதுகாவல் வாழ்வாக அமைய வேண்டும் என்று எடுத்துக் கூறியவர் – அப்பரடிகள்; இதனை வழிமொழிந்தவர் – **காந்தி**

133.உலகம் உண்ண உன். உடுத்த உடுப்பாய் என்று கூறியவர் – **பாவேந்தர் பாரதிதாசன்**

134.செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே
என்னும் பாடல் வரி எந்த நூலில் இடம் பெற்றுள்ளது – **புறநானூறு**

135.மக்கள் பணியையே இறைப் பணியாக எண்ணித்தம் வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்தவர் – **தவத்திரு குன்றக்குடி அடிகளார்**



TNPSC Coaching Centre போகாமல் வீட்டில் முயற்சி செய்யும் My Brother, Sister மட்டும்
இந்த ஆண்டு 2022 -2023 நான் JOB போகணும், www.minnalvegakanitham.in

136.குன்றக்குடி திருமடத்தின் தலைவராக இருந்து தமது பேச்சாலும் எழுத்தாலும் இறைத்தொண்டும் சமூகத் தொண்டும் இலக்கியத் தொண்டும் ஆற்றியவர் – **தவத்திரு குன்றக்குடி அடிகளார்**

137.திருக்குறள் நெறியைப் பரப்புவதைத் தம் வாழ்நாள் கடமையாகக் கொண்டவர் – **குன்றக்குடி அடிகளார்**

138.உலகம் உண்ண உண்; உடுத்த உடுப்பாய் என்று கூறியவர் – **பாரதிதாசன்**

139.சாந்தம் உடையோர் பேறுபெற்றோர் எனத்
தத்துவமும் சொன்னார் – இந்தத்
தாரணி முழுவதும் அவர்களுக்கு உரியது
தலைவர்கள் அவர்என்றார்! – **மலைப்பொழிவு – கண்ணதாசன்**

140.மாந்தரின் வாழ்வில் தேவைப் படுவது
சாந்தம் தான்என்றார் – அது
மண்ணையும் ஆளும் விண்ணையும் ஆளும்
மகத்துவம் பார்என்றார் – **மலைப்பொழிவு – கண்ணதாசன்**

141.சாதிகளாலும் பேதங்களாலும்
தள்ளாடும் உலகம் – அது
தர்மம் ஒன்றை நம்பிய பிறகே
அடங்கிவிடும் கலகம்! – **மலைப்பொழிவு – கண்ணதாசன்**

142.ஓதும் பொருளாதாரம் தனிலும்
உன்னத அறம்வேண்டும் – புவி
உயர்வும் தாழ்வும் இல்லா தான
வாழ்வினைப் பெறவேண்டும் – **மலைப்பொழிவு – கண்ணதாசன்**

143.இரக்கம் உடையோர் பேறுபெற்றோர் என
இயேசுபிரான் சொன்னார் – அவர்
இரக்கம் காட்டி இரக்கத்தைப் பெறுவர்
இதுதான் பரிசுஎன்றார் – **மலைப்பொழிவு – கண்ணதாசன்**

144.வாயும் வயிறும் ஆசையில் விழுந்தால்
வாழ்க்கை பாலைவனம் – அவர்
தூய மனத்தில் வாழ நினைத்தால்

www.minnalvegakanitham.in



TNPSC Coaching Centre போகாமல் வீட்டில் முயற்சி செய்யும் My Brother, Sister மட்டும்
இந்த ஆண்டு 2022 -2023 நான் JOB போகணும், www.minnalvegakanitham.in

எல்லாம் சோலைவனம் – **மலைப்பொழிவு – கண்ணதாசன்**

**145.**தமையும் வாட்டிப் பிறரையும் வாட்டும்

சண்டை சச்சரவு – தினம்

தன்னாடு என்றும் பிறர்நாடு என்றும்

பேசும் பொய்யுறவு – **மலைப்பொழிவு – கண்ணதாசன்**

**146.**இமைக்கும் போதில் ஆயிரம் போட்டி

எத்தனை வீண்கனவு – தினம்

இவை இல்லாது அமைதிகள் செய்தால்

இதயம் மலையளவு – **மலைப்பொழிவு – கண்ணதாசன்**

**147.**ஒரு விடியலில் குயில் குஞ்சு "கூ" என்று கூவியது

அன்று தானொரு குயில் என்று கண்டு கொண்டது – **தன்னை அறிதல் – சே. பிருந்தா**

**148.**தமிழக அரசியல் வானில் கவ்வியிருந்த காரிருளை அகற்ற வந்த ஒளிக்கதிராக காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் அவர்கள் திகழ்கிறார் என்று கூறியவர் – **அறிஞர் அண்ணா**

**149.**இப்படிப்பட்ட தலைவர் கிடைப்பது அரிது. அவர் நல்ல உத்தமமான மனிதர் என்று காயிதே மில்லத்தை குறிப்பிட்டவர் – **தந்தை பெரியார்**

**150.**கண்ணியமிகு என்னும் அடைமொழியால் அழைக்கப்படுபவர் – **காயிதே மில்லத்**

**151.**தமது கல்வியைவிட நாட்டின் விடுதலையே மேலானது என்று எண்ணி ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டவர் – **காயிதே மில்லத்**

**152.**மணக்கொடை வாங்கும் திருமணங்களில் கலந்து கொள்ள மாட்டேன் என்று வெளிப்படையாக அறிவித்தவர் – **காயிதே மில்லத்**

**153.**பழமையான மொழிகளிலே ஒன்றைத்தான் ஆட்சிமொழி ஆக்க வேண்டும் என்றால், அது தமிழ்மொழிதான் என்று நான் உறுதியாக சொல்வேன் என்று நாடாளுமன்றத்தில் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக அறிவிக்க வேண்டும் என்று கூறியவர் – **காயிதே மில்லத்**

www.minnalvegakanitham.in



TNPSC Coaching Centre போகாமல் வீட்டில் முயற்சி செய்யும் My Brother, Sister மட்டும்
இந்த ஆண்டு 2022 -2023 நான் JOB போகணும், www.minnalvegakanitham.in